**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 06.02.2026

அசல் வழக்கு எண். 180/2014

பி.சா.1 – சாந்தி, க/பெ. சீனுவாசன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள் என்றால் ஆரம்பத்தில் புடவை வியாபாரம் செய்து வந்தேன் தற்பொழுது உடல்நிலை சரியில்லை என்கிற காரணத்தினால் இல்லத்தரசாக இருந்து வருகிறேன். முன்பு புடவை வாங்கி விற்பனை செய்வீர்களா என்றால் ஆமாம் அவ்வாறு செய்து வந்தேன். கடை கிடையாது வீட்டுவுடன் இருந்து புடவை வியாபாரம் செய்து வந்தீர்கள் என்றால் சரிதான். என்ன புடவை வியாபாரம் செய்து வந்தீர்கள் என்றால் சாதாரண பூனம் புடவைகளை வாங்கி விற்பனை செய்து வந்தேன். வழக்கு சொத்து எங்கு இருக்கிறது என்றால் கன்னிகா புரத்தில் இருக்கிறது. தாட்டிதோப்பில் தான் இருக்கிறது என்றால் சரிதான். வீட்டின் நீளம் அகலம் தெரியாது என்றால் சரிதான். மூர்த்தி பால விருதகிரி, முருகேச பாண்டியன் ஆகியோர்கள் தெரியுமா என்றால் முருகேச பாண்டியன் மட்டும் தெரியும் எங்கள் வீட்டுக்காரர் இருந்தபோது வருவார்கள். உங்கள் கணவர் பெயர் என்ன என்றால் சீனிவாசன். உங்கள் கணவர் என்ன வேலை செய்தார் என்றால் வரதராஜ சுவாமி சொசைட்டியில் மெம்பராக இருந்தார். எப்பொழுது உங்கள் கணவர் இறந்துவிட்டார் என்றால் கடந்த 2012 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். வழக்கு தாக்கல் செய்த முருகேசன் என்பவர் தெரியுமா என்றால் தெரியும். அவரும் வரதராஜ சுவாமி சொசைட்டியில் மெம்பராக இருக்கிறார் தெரியுமா என்றால் தெரியும். வாதி வழக்கினை எதற்காக தாக்கல் செய்தார் தெரியும்

என்றால் தெரியும். வழக்கு சொத்து ஆதியில் வரதராஜ சுவாமி சொசைட்டிக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். வாதி முருகேசன் என்பவருக்கு கடந்த 29 3 2011 அன்று வரதராஜ சுவாமி சொசைட்டி சார்பாக கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அந்த ஆவணத்தை நீங்கள் வாங்கி பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். இது போன்ற கிரைய பத்திரம் உங்கள் பெயரில் பதிவாகி உள்ளதா என்றால் கிரைய பத்திரம் பதிவாகவில்லை. பில்லு போடும்போது வீட்டு வரி எங்கள் பேரில் கொடுத்தார்கள். வீட்டு வரி, குழாய் வரி, கரண்ட் பில் ஆகியவை என் பெயரில் வருகிறது அதனை கோர்ட்டில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சொத்துக்கு பட்டா வாதி முருகேசன் பெயரில் வருகிறது என்றால் சரிதான் தற்பொழுது தான் அவ்வாறு வருகிறது. எந்த வருடத்தில் இருந்து வருகிறது என்றால் தெரியாது. வா.சா.ஆ2 வழக்கிற்கு முன்பு முருகேசன் பெயரில் பட்டா வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.11,12 முனிசிபாலிட்டி முருகேசன் பெயரில் வருகிறது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 முதல் 4 வரை வரி ரசீது இல்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.1 ல் நடப்பு கணக்கு எண் அதாவது ந.க. எண் இல்லை என்றால் சரிதான். அதனுடைய அசல் எங்கு உள்ளது என்றால் என் கணவர் தான் அனைத்தையும் பார்த்துக் கொண்டு வந்தார் திடீரென்று இறந்து விட்டதால் எனக்கு ஒன்றும் தெரியாது. நீங்களும் உங்கள் கணவரும் ஒரே வீட்டில் தான் வசித்தீர்கள் என்றால் சரிதான் ஜெராக்ஸ் எதிலிருந்து எடுக்கப்பட்டது என்றால் அதனை தேடி பார்த்து தான் எடுத்தோம். ஒரிஜினல் தேடி எடுத்து எடுத்தீர்களா என்றால் அதிலிருந்து

தான் எடுக்கப்பட்டது. அதில் சொசைட்டி சீல் இருக்கிறதா என்று பார்த்தீர்களா என்றால் சீல் எதுவும் இல்லை. அதனை படித்துப் பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். கட்ட வேண்டிய தொகை ரூ.32,950/- என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் நிலுவைத் தொகையை கட்டாமல் வம்பு செய்கிறீர்கள் ஆகவே உடனடியாக நிலுவை தொகை கட்ட வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நிலுவைத் தொகை கட்டி பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதனையும் வாங்கவில்லை அதனை நீதிமன்றத்திலும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram